1989 நவம்பர் 1]

திரு. எம். முகமது சித்திக்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது தொகுதியில் தரங்கம்பாடி என்பது ஒரு மைய மான தாலுக்கா அலுவலகத்தைக் கொண்ட பகுதி. அந்தப் பகுதியில் மின்சாரப் பற்றாக்குறை இருந்து வருகிறது. ஏறத் தாழ 15 பஞ்சாயத்துக்களில் குறைந்த மின் அழுத்தம் உள்ள மின் சாரமே கிடைத்து வருகிறது. அங்கே துணை மின் நிலையம் அமைப்பதை அரசு அறிவிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கி றேன்.

மாண்புமிகு திரு. கே. என். நேரு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தரங்கம்பாடி பகுதிக்கு இப்போது வேலங் குடியிலிருக்கின்ற 66/15 கிலோ வாட் மின்சாரம் துணை மின் நிலையத்திலிருந்து மின் விநியோகம் நடைபெற்றுக் கொண்டிருக் கிறது. பெருகிவரும் மின் தேவையைக் கருத்தில் கொண்டு புதிதாக 33/11 கிலோ வாட் கொண்ட துணை மின் நிலையம் ஒன்றை அமைப்பதற்கு அரசு முயற்சி எடுத்து நடைமுறைப் படுத்தவிருக்கிறது. வருகின்ற 1993-94 ஆம் ஆண்டிலே அது முடிவு பெறும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

குடிசைகளுக்கு ஒரு விளக்குத் திட்டம்.

* 3783. திரு. கே. அர்ஜுனன்:

மாண்புமிகு மின்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக் களுக்கு விடையளிப்பாரா:

(அ) குடிசைகளுக்கு ஒரு விளக்குத் திட்டத்தின்கீழ் வழங்கப்பட்ட இலவச மின் இணைப்பு திட்டம் தற்போது கைவிடப்பட்டது உண்மையா?

(ஆ) ஆம் எனில், அத்திட்டம் மீண்டும் செயல்படுத்தப் படுமா?

மாண்புமிகு திரு. கே. என். நேரு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) கைவிடப்படவில்லை. குடிசைகளுக்கு ஒரு விளக்கு திட்டத்தின் கீழ் இலவச மின் இணைப்பு திட்டம் தொடர்ந்து செயல்படுத்தப்பட்டு வருகின்றது.

(ஆ) இவ்வினாவிற்கு இடமில்லை.

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

[1989 நவம்பர் 1

(10-15)

திரு. சி. கோவிந்தசாமி: பேரவைத் தலைவர் அவர்களே, குடிசைகளுக்கு ஒரு விளக்கு வழங்குவதைப் போல, ஊரக வேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ் ஏற்கெனவே கிராமப்புறங் களில் கட்டப்பட்டு இருக்கின்ற தொகுப்பு வீடுகளுக்குத் தொடர்ந்து பல வருடங்களாக மின் இணைப்புக் கொடுக்கப் படாமல் இருக்கிறது. ஆகவே குறிப்பாக என்னுடைய தொகுதி யில், 500 வீடுகள் கட்டப்பட்டிருப்பதில், 20 வீடுகளுக்கு மட்டுமே மின் இணைப்புக் கொடுக்கப்பட்டிருக்கிறது. காலம் தாழ்த்தாமல் உரிய நேரத்தில் மின் இணைப்பு கொடுக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. என். நேரு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஆண்டு இதுபோல குடிசைக்கு ஒரு விளக்கு திட்டத்தில் 20 ஆயிரம் குடிசைகளுக்கு மின் இணைப்பு வழங்கவேண்டுமென்று உத்தரவிட்டு இதுவரை 10 ஆயிரம் குடிசைகளுக்கு வழங்கப்பட்டிருக்கிறது. மேலும் இதுபோல தொகுப்பு வீடுகளுக்கும் தரப்பட வேண்டுமென்று மாண்புமிகு முதல்வர் அவர்கள் உத்தரவிட்டிருக்கிறார்கள். கூடிய விரைவில் அரசின் சார்பாக கட்டப்பட்டிருக்கின்ற இலவச வீடுகளுக்கும் இது விரிவுபடுத்தப்பட்டு எவ்வளவு விரைவாக மின் வசதி செய்யப்பட வேண்டுமோ அவ்வளவு விரைவாக மின் வசதி செய்து தரப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. காதர்பாட்சா என்கிற வெள்ளைச்சாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது ஆதி திராவிட மக்களுடைய குடிசைகளுக்கு மின்சார இலாகாவால் மின்சாரம் தரப்படுகிறது என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெரிவித் தார்கள். அதைப் போல மிகவும் பின்தங்கியிருக்கின்ற சீர்மர பினர் பகுதியில் தொகுப்பு வீடுகளுக்கு இலவச மின்சாரம் வழங்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. என். நேரு: இதுபோல திட்டம் எதுவும் அரசின் பரிசீலனையில் இல்லை.

திரு. அ. லெ. சுப்பிரமணியன்: மாண்புமிகு தலைவர் அவர் களே, சில குடிசைகளை அரசின் புறம்போக்கு நிலத்தில் கட்டி யிருக்கிறார்கள். அதற்கு 'பி' மெமோ போட்டிருக்கிறார்கள்.

1989 நவம்பர் 1]

அவர்களுக்குப் பட்டா வழங்கப்பட இருக்கிறது. அவர்கள் மின் விளக்கு இணைப்பு வேண்டுமென்று கேட்டார்கள். ஆளுநர் ஆட்சியில், வட்டாட்சியர் அனுமதி—என்.ஓ.சி. கொடுத்தால்தான் மின் இணைப்பு தரப்படும் என்று புதிதாக அரசாணை இயற்றியிருக்கிறார்கள். அதைத் தளர்த்தி எல்லா குடிசைகளுக்கும், வட்டாட்சியரின் நோ அப்ஜெக்ஷன் சர்டிபிகேட் இல்லாமல் மின் விளக்கு தருவதற்கு, நேரு நூற்றாண்டில் இந்த அமைச்சர் நேரு முன் வருவாரா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. என். நேரு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போதுதான் புதிதாக தாசில்தாரின் என்.ஓ.சி. வேண்டுமென்று கேட்கவில்லை. பல ஆண்டுக் காலமாக அதுபோல புறம்போக்கு நிலத்தில் இருக்கின்ற குடிசைகளுக்கு மின்விளக்கு தரவேண்டுமென்றால் வட்டாட்சியரின் என்.ஓ.சி. பெற்றுத்தான் இதுவரை தந்து கொண்டு இருக்கிறோம். இப்போது பெருகி வருகிற மின் தேவையைக் கருத்தில் கொண்டு மேட்டூர், திண்டிவனம் போன்ற இடங்களிலும் இதுபோல குடிசைகளுக்கு மின் விளக்கு வேண்டுமென்று கேட்டு இருக்கிறார்கள். வருவாய்த்துறை அமைச்சர் அவர்களிடமும் வருவாய்த்துறை அதிகாரிகளிடமும் நமது துறையின் மூலமாக அங்கெல்லாம் மின்வசதி செய்து தரவேண்டுமென்று கேட்டிருக்கிறோம். அவர்கள் எங்களுக்கு அனுமதி அளித்தவுடன் நிச்சயமாக அத்துணை குடிசைகளுக்கும் மின் விளக்கு வசதி செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ப. முத்துசாமி: ஏற்கெனவே கழக ஆட்சியில் மின்சாரம் இல்லாத கிராமங்கள் இல்லையென்ற அளவுக்கு எல்லா ஊர்களுக்கும் மின்சாரம் வழங்கப்பட்டது. ஆனால் இடையில் 13 ஆண்டுக்காலம் பல கிராமங்கள்—குறிப்பாக வேடசந்தூர் தொகுதியில் குடகனாறு வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட கிராமங்கள் தெருவிளக்கு இல்லாமல் அவதிப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். அவற்றிற்கு முன்னுரிமை தந்து, மின்சாரம் கிடைக்க ஆவன செய்யப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. என். நேரு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஆண்டு மொத்தம் 20 ஆயிரம் தெரு விளக்குகளுக்கு மின் இணைப்புத் தரவேண்டுமென்று உத்தா

விடப்பட்டு இதுவரை 19 ஆயிரம் தெரு விளக்குகளுக்கு மின் இணைப்பு தரப்பட்டிருக்கிறது. இப்போது அதிகமான கோரிக்கைகள் வந்திருக்கின்ற காரணத்தால் மேலும் 7000 தெரு விளக்குகளுக்கு தரப்பட வேண்டுமென்று உத்தரவு இடப்பட்டிருக்கிறது. மின் இணைப்பு இல்லாத கிராமங்கள் பற்றி குறிப்பாக கவனத்திற்குக் கொண்டு வந்தால் நிச்சயமாக மின் இணைப்பு தரப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

(10-20)

திரு. பெ. சீனிவாசன்: தலைவர் அவர்களே, புறம்போக்குப் பகுதிகளில் இருக்கின்ற குடிசைகளுக்கு மின் இணைப்பு தருவதிலே தாசில்தாருடைய 'நோ அப்ஜக்ஷன் சர்ட்டிபிகேட்' வாங்குவதிலே மெத்த சிரமம் இருக்கிறது. எப்படி இருந்தாலும் அதை வாங்க முடியாது. பத்திரம் பதிகிற இடத்திலே யார் வாங்குகிறார்கள், யார் விற்கிறார்கள் என்பதைப் பற்றி மட்டுமே கவலைப்படுகிறார்களே தவிர வேறு எதைப்பற்றியும் கவலைப்படுவதில்லை. எனவே அதுபோல் மின்சார இலாகாவிடம் மின்னிணைப்பு கேட்டால் இணைப்பு கொடுக்கக்கூடிய அளவுக்கு அந்தக் குடிசை பாதுகாப்பாக இருந்தால் கொடுக்கலாம். எனவே தாசில்தாருக்கும் இதற்கும் சம்பந்தம் இல்லாத அளவுக்கு உத்தரவு வழங்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. என். நேரு: மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் வருவாய்த்துறை அமைச்சர் அவர்களிடம் இந்தக் கேள்வியைக் கேட்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

சென்னை பூங்கா நகர் தொகுதியில் குடிசை மாற்று வாரிய வீடுகளைப் பழுதுபார்த்தல்.

*1001. திரு. அ. ரகுமான்கான்:

மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

சென்னை பூங்கா நகர் தொகுதியில் உள்ள கல்யாணபுரம், பார்வதி கக்கன் காலனி, பெரியார் நகர், கேசவப்பிள்ளை பார்க் ஆகிய இடங்களில் உள்ள குடிசை மாற்று வாரிய வீடுகள் பல பழுது அடைந்திருப்பதாலும், படிகட்டுக்கள் கழிப்பறைகள் இடிந்து இருப்பதாலும் மீண்டும் புதுப்பிக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?